**செ. கு. எண்**:41 **நாள்**:10.02.2013

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 10.2.2013

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், புலிவானந்தல் கிராமம் அருகில் 2.2.2013 அன்று சேத்துப்பட்டிலிருந்து போளூருக்கு சென்று கொண்டிருந்த அரசு பேருந்து நிலை தடுமாறி கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், புலிவானந்தல் கிராமத்தைச் சேர்ந்த திரு. முனுசாமி என்பவரின் மகன் ஜெயபால் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரமடைந்தேன்.

இந்த சாலை விபத்தில் அகால மரணமடைந்த ஜெயபால் அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்த ஜெயபாலின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**